செ.வெ.எண்:22 நாள்:11.06.2019

**பத்திரிக்கைச்செய்தி**

கரூர் மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் சார்ந்தோர் அறிவது,

முன்னாள் படைவீரர் நலத்துறை வாயிலாக பல்வேறு கல்விகள் பயிலும் முன்னாள் படைவீரர் சிறார்களுக்கு, தொகுப்பு நிதியிலிருந்து கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, 2019-20ம் கல்வியாண்டிற்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் விண்ணப்ப படிவம் வழங்கப்பட்டு வருகிறது.

மத்திய முப்படைவீரர் வாரியத்தில் (KSB) விண்ணப்பிக்காதவர்கள், கலை மற்றும் அறிவியல் கல்வி, தொழிற்கல்வி, பல்தொழில்நுட்பக் கல்வி மற்றும் ஒன்று முதல் 12-ம் வகுப்புவரை பள்ளிகளில் பயிலும் முன்னாள் படைவீரர் சிறார்களின் பெற்றோர்கள், திருச்சிராப்பள்ளி மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்திலிருந்து விண்ணப்பப் படிவம் பெற்று, உரிய ஆவணங்களுடன் மீள சமர்ப்பித்து, கல்வி உதவித்தொகை பெற்றுச் செல்லுமாறு தெரிவிக்கப்படுகிறது.

**கல்வி உதவித்தொகை விவரம்:**

1. கலை மற்றும் அறிவியல் கல்வி … ரூ.10,000/-
2. தொழிற்கல்வி … ரூ.10,000/-
3. பல்தொழில்நுட்பக் கல்வி … ரூ.20,000/-
4. 1 முதல் 5ம் வகுப்பு வரை … ரூ.500/-
5. 6 முதல் 8ம் வகுப்பு வரை … ரூ.800/-
6. 9 முதல் 10-ம் வகுப்புவரை … ரூ.1,000/-
7. 11 முதல் 12-ம் வகுப்புவரை … ரூ.1,500/-

மேலும் சுயதொழில் செய்வதை ஊக்கப்படுத்திடும் வகையில் வங்கிக்கடன் வட்டி மானியமும், போர்விதவைகளுக்கு வீடு புதுப்பித்தலுக்கு நிதியுதவியும் வழங்கப்பட்டு வருகிறது. விருப்பமும், தகுதியுள்ள முன்னாள் படைவீரர்கள் இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்தி பயன்பெறுமாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த. அன்பழகன்,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**